பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 09 | சனிக்கிழமை | 26.10.2024 | அதிர்வு 85

## எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் வாக்கெடுப்பு இன்று




காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

05

### வடக்கு - கிழக்கில் ஜே.வி.பி. உள்ளிட்ட

# அனைத்து சிங்களக் கட்சிகளையும் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்

### முன்னாள் எம்.பி. கஜேந்திரன் வலியுறுத்து




(பிரபாகரன் டிலக்சன்)

"அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு இந்த நாட்டிலே தேனும் பாலும் ஓடச் செய்யும், மனுநீதிச் சோழன் போல நீதி வழங்குவார்கள் என்று தென்னிலங்கை சிங்கள மக்கள் புகழ்ந்து கொண்டிருப்பதை நம்பி தமிழ்ச் சமூகத்தில் ஆழமாகச் சிந்திக்கத் திறனற்றவர்கள் ஜே.வி.பி. இனவாதிகளைக் கொண்டாடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. தமிழர் தாயகத்தில் இனவாத ஜே.வி.பினரை முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டும். அதுபோல் அனைத்து சிங்களப் பேரினவாதக் கட்சிகளையும் நிராகரிக்க வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தினார்.

05

# அநுர - டக்ளஸ் திடீர் சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவுக்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகப் பணியாற்றிய கடந்த காலப் பகுதியில், அடையாளம் கண்டு சிபார்சு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களைத் தொடர்வது மற்றும் ஆரம்பிக்கத்

05






அரசாங்கம் என்றால் – அதிகார பீடம் என்றால் – குத்துவெட்டுக்கள், குழப்பங்கள், முரண்பாடுகள் சகஜம்தான்.

அது பழைய கட்சிகள் என்றால் என்ன, புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி என்றால் என்ன, உள்வீட்டுக் குழப்பங்களுக்குப் பஞ்சம் இருப்பதில்லை.

இப்போதும் கூட, நாட்டின் அமைச்சரவை ஆக மூன்று உறுப்பினர்களை மட்டும் கொண்டிருந்தாலும் கூட, அதற்குள்ளும் குழப்பம் இருப்பதாகச் செய்திகள் கசிகின்றன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் நியமன விடயத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடு உச்சமாக நிலவியதாகக் கூறப்படுகிறது.

இதுவரை காலமும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் சம்பத் அமரதுங்க அந்தப்

05

# தமிழ்த் தேசியத்தைச் சிதறடிக்கின்ற சக்திகளை இனங்கண்டு புறந்தள்ளுக!

## வடக்கு - கிழக்கு தமிழ் மக்களிடம் சுரேஷ் வேண்டுகோள்



(எஸ்.நிதர்ஷன்)

"நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தைச் சிதறடிக்கின்ற சக்திகளை இனங்கண்டு புறந்தள்ளுங்கள் என்று வடக்கு – கிழக்கு தமிழ் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்."

– இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மல்லாகத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஒருமித்த கோரிக்கையாக நீண்ட காலம் இருந்து வருகின்றது.

2002ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்புடன் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளை இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஓர் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது. அந்த ஐக்கிய முன்னணிக்கு ஓர் அமைப்பு வடிவம் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான தலைவர், செயலாளர் உட்பட நிறைவேற்றுக் குழுக்கள் போன்றவை உருவாக்கப்பட வேண்டும் அது தேர்தல்கள் ஆணையத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் போன்ற விடயங்களை அதன் தொடக்கத்திலிருந்தே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வலியுறுத்தி வந்தது. ஆனால், தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடம் அதனைத் தொடர்ச்சியாக நிராகரித்து வந்தது மாத்திரமல்லாமல் உட்கட்சி ஜனநாயகம் என்ற எதுவுமே இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது படிப்படியாகச் சீரழிந்து போனது.

குறிப்பாகக் கூறுவதாக இருந்தால், தமிழரசுக் கட்சிக்குள் புதிதாக உள்வாங்கப்பட்டவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழித்து ஒழிக்க வேண்டுமென்ற நிகழ்ச்சி நிரலுடனும் தேசிய இனப்பிரச்சினையை நீர்த்துப்போகச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடனும் செயற்பட்டார்கள் என்பது வெள்ளிடைமலை. இன்று தமிழரசுக் கட்சியும் ஒரு தலைமைத்துவம் இல்லாமல் தனக்குள் சின்னாபின்னப்பட்டு தீர்க்கமான எந்த முடிவுகளும் எடுக்க முடியாமல் நீதிமன்றம் வரை சென்றிருக்கின்றது.

இத்தகைய ஒரு நிலையில் தமிழரசுக் கட்சி வடக்கு – கிழக்கில் பல ஆசனங்களை எடுத்து ஒரு வலுவான நிலையில் நாடாளுமன்றம் சென்று புதிதாக வரவுள்ள அரசுடன் பேச்சு நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்று சுமந்திரன் கூறுவது சிறுபிள்ளைத்தனமானதும் சிரிப்புக்குரிய விடயமுமாகும். அவர், தனது கட்சிக்குள் இருக்கக்கூடிய பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் நீதிமன்றம் வரை சென்றது மாத்திரமல்லாமல் தமிழரசுக் கட்சியினுடைய வேட்பாளர் நியமனங்களை நிராகரித்து அதே கட்சியைச் சார்ந்த முக்கியஸ்தர்களை சுயேச்சைக் குழுவாக போட்டியிட வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐக்கியத்தைச் சிதறடித்து அதிலிருந்த அனைத்துக் கட்சியினரும் வெளியேறக் காரணமாக இருந்தவர்கள் பின்னர் தமது கட்சியான தமிழரசுக் கட்சியையும் சின்னாபின்னப்படுத்தியவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள் என்றோ தமிழ்த் தேசியத்துக்கு விசுவாசமானவர்களாக இருப்பார்கள் என்றோ எதிர்பார்க்க முடியாது. எனவே, இத்தகையவர்கள் நாடாளுமன்றம் செல்வதென்பது தமிழ்த் தரப்பு ஒற்றுமைப்படாமல் தொடர்ந்தும் சிதறிப்போகவே வழிவகுக்கும் என்பதுடன் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இது எந்தவிதத்திலும் உடன்பாடானதாகவோ உந்துசக்தியாகவோ இருக்க மாட்டாது என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும், எந்தவிதமான கொள்கை முடிவுகளுமின்றி தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவோ வடக்கு – கிழக்கு அபிவிருத்தி தொடர்பாகவோ எவ்வித தொலைநோக்குமற்று இருக்கக்கூடிய சில தனிநபர்கள் சுயேச்சைக் குழுக்களாக தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்க முனைந்திருப்பதும் வருந்தக்கூடிய ஒரு செயலாகும்.

இந்தநிலையில் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி களம் பல கண்டு சகல துன்பங்கள், துயரங்கள், வலிகளுக்கு முகங்கொடுத்து எமது மக்கள் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் தமது சொந்தப் பிரதேசத்தில் சுயாட்சியுடன் வாழவேண்டும் என்ற நோக்குடன் செயற்படக்கூடிய போராட்ட சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கியுள்ளனர்.

இவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது கட்டமைப்பை உருவாக்கி அதனூடாக ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி குறுகிய காலத்தில் 2 இலட்சத்து 26 ஆயிரம் வாக்குகளை எடுத்து தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதை மிக உறுதியான குரலில் அனைவரினதும் காதுகளுக்கும் எட்டச் செய்தவர்கள். அதனுடைய தொடர்ச்சியாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஓர் அமைப்பாக மாத்திரமல்லாமல் இந்த ஐக்கிய முன்னணிக்குள் அனைவரையும் இணைத்து அதனைப் பலமிக்க சக்தியாக்கி, தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று முயற்சிப்பவர்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் மாத்திரமே.

ஐக்கியத்துக்கு எதிராகச் செயற்படுபவர்களையும் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து இந்தத் தேர்தலை ஒரு கேலிக்கூத்தாக்க முனையும் சுயேச்சைக் குழுக்களையும் தமிழ் மக்களுக்கு எது நடந்தாலும் சரி தென்னிலங்கை சிங்களக் கட்சிகளுடன் இணைந்துதான் செயற்படுவோம் என்கின்ற தமிழ்த் தரப்பு கட்சிகளையும் நிராகரித்து தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள தகுதியானவர்களாகவும் தமிழ் மக்களின் உண்மையான அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லக்கூடியவர்களாகவும் இருக்கக்கூடிய சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரைப் பலமிக்க சக்தியாக நாடாளுமன்றம் அனுப்புவதனூடாக தமிழ் மக்களாலும் ஒரு மாற்றத்தை உருவாக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்." – என்றார்.





# வாக்களிக்கும் முறைமை பற்றி தெளிவுபடுத்தும் செயலமர்வு

தபால் மூலம் வாக்களிக்கவுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு வாக்களிக்கும் முறைமை பற்றி - ஒவ்வொரு திணைக்களங்களையும் சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு தெளிவுபடுத்துவதற்கான செயலமர்வு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது செல்லுபடியற்ற வாக்குகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகமாகக் காணப்பட்டன. ஆதலால் மாவட்ட ரீதியில் இந்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதால், இந்தத் தெளிவூட்டலைச் சரியாகப் பெற்று ஒவ்வொருவரும் தான் சார்ந்த திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற சகல உத்தியோகத்தர்களையும் அழைத்து தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் பொதுமக்களுக்கான வாக்களிப்பு முறைமை பற்றிய தெளிவுபடுத்தலானது பிரதேச செயலக ரீதியாக பிரதேச செயலர்களின் வழிகாட்டுதலில் உதவிப் பிரதேச செயலாளர், நிர்வாக கிராம அலுவலர் தலைமையில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் கிராமங்களில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவத்தாட்சி அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

வாக்களிப்பு முறைமை பற்றி உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ்ஜ/ம் விளக்கமளித்தார்.

மேலும் காணொளி மூலமும் காட்சிப்படுத்தி விளக்கமளிக்கப்பட்டது.

இந்தச் செயலமர்வில் ஒவ்வொரு திணைக்களங்களில் இருந்தும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டார்கள்.



# கொழும்பில் ரயிலில் மோதி பாடசாலை மாணவன் சாவு!



கொழும்பு, தெமட்டகொடை ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் மோதி பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என்று தெமட்டகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த மாணவன் பாடசாலை முடிவடைந்த பின்னர் மேலதிக வகுப்புக்குச் செல்வதற்காக ரயில் நிலையத்துக்குச் சென்ற வேளை இந்தப் பரிதாபச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தெமட்டகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிகளை வழங்குவதாக நியூசிலாந்து உறுதி



ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் டேவிட் பயின் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு வாழ்த்து கூறிய நியூசிலாந்து உயர்ஸ்தானிகர், பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக நாட்டிற்குள் வலுவான மற்றும் பலன்மிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்குவதாகவும் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

தற்போது வருடாந்தம் இலங்கைக்கு 7,500 சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகவும், அந்த எண்ணிக்கையை 50,000 வரையில் அதிகரிக்க இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார்.

இலங்கைக்குள் நியூசிலாந்து முதலீடுகளுக்கான வாய்ப்புகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பம், பயிற்சி, வளங்கள் தொடர்பில் நியூசிலாந்தின் நிபுணத்துவ அறிவை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இலங்கையின் கல்வித் துறையில், குறிப்பாக தொழில் கல்வித் துறையின் முன்னேற்றத்துக்காக நியூசிலாந்து பெற்றுக்கொடுக்கக்கூடிய உதவிகள் தொடர்பிலும், விளையாட்டுத்துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல் மற்றும் விளையாட்டுத்துறை நிர்வாக பயன்பாடுகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இந்நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளினதும் இந்நாட்டு மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தார்.

தற்போதைய சுற்றுலா பரிந்துரைகளை காலோசிதமானதாக மாற்றுவது குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிரதான சுற்றுலா வலயங்களுக்குள் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், சட்டத்தை அமுல்படுத்தல், அவசர சேவைகளை வலுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

நியூசிலாந்து பிரதி உயர்ஸ்தானிகர் கேப்ரியல் அயிசாக்கும் இதன்போது கலந்துகொண்டிருந்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதவியில் தொடர வேண்டும் என்பதுதான் பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தீர்மானமாக இருந்தது.

பேராசிரியர் சம்பத் அமரதுங்கவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக தொடர்வார் என்று பிரதமர் அறிவித்து 24 மணித்தியாலத்துக்குள் அந்த பதவியில் இருந்து விலகுமாறு பேராசிரியர் சம்பத் அமரதுங்கவுக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து வழிகாட்டல் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பிரதமரின் இணக்கம் அல்லது விருப்பமின்றியே பேராசிரியர் கபில செனிவிரட்னவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக ஜனாதிபதி நியமித்திருக்கிறார்.

ஆட்சி நிர்வாக விடயத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடு இருப்பது பற்றிய முதல் தகவல் இதுவாகும்.

\+ + +

வடக்கில் வீடு வீடாகத் தேர்தல் பிரசாரத்துக்குச் செல்ல முற்படும் வேட்பாளர்களை பொலிஸார் கைது செய்யும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

இத்தகைய சம்பவங்கள் திட்டமிட்டுப் பழிவாங்கும் பொலிஸாரின் நடவடிக்கை என்று சில வேட்பாளர்கள் பகிரங்கமாகக் கூறும் நிலையும் காணப்படுகின்றது.

ஆனால் 1981 ஆம் ஆண்டின் தேர்தல் சட்டங்கள் மற்றும் அதன் பின்னர் வந்த 2023 ஆம் ஆண்டின் 21 இலக்க சட்டத் திருத்தங்களின் அடிப்படையில் பொலிஸார் இவ்விடயத்தில் எடுக்கும் நடவடிக்கை சட்டப்படியானது என்பதை வேட்பாளர்கள் கவனத்தில் கொள்வதில்லை.

அந்தச் சட்டத்தின் 75 மற்றும் 75(1) ஆவது பிரிவுகளின்படி, வேட்பாளரோ அல்லது அவரது குடும்பத்தாரோ வீடுகள் தோறும் பிரசார நடவடிக்கைகளுக்காகச் செல்வது தடை செய்யப்பட்டிருக்கின்றது. இதில் வேட்பாளரின் குடும்பத்தவர் என்று குறிப்பிடப்படுவது அவரின் பெற்றோர், அவரின் சகோதர, சகோதரிகள், துணைவர், அவரின் பிள்ளைகள் அல்லது பிள்ளைகளின் துணைவர் என அந்தச் சட்டம் வரையறுக்கின்றது.

தேர்தல் வேட்பு மனு ஏற்கப்படும் கடைசித் தினத்திலிருந்து தேர்தல் பிரசார காலத்தில் இவ்வாறு வீடு வீடாகப் பிரசார நடவடிக்கைகளுக்கு வேட்பாளரோ அல்லது அவரது குடும்பத்தவரோ சென்றால் அது தொடர்பில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும் என அந்தச் சட்டம் தெரிவிக்கின்றது.

இந்தக் குற்றத்தை இழக்கும் ஒரு நபருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை அல்லது ஐம்பதாயிரம் ரூபா வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்பட முடியும் என்றும் சட்டம் கூறுகின்றது.

ஆகவே வேட்பாளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் தேர்தல் பிரசார ஆவணங்கள், படங்கள், பதாகைகளுடன் வீடு வீடாகச் சென்றால் பொலிஸார் அவர்களைக் கைது செய்ய முடியும். அதற்குச் சட்டத்தில் இடம் உள்ளது என்பதை சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## அனைத்து சிங்களக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், தேர்தல் விதிமுறையை மீறினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு வாக்குமூலங்களைப்பெற்றதன்பின்னர்பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்தக் கைது தொடர்பில் ஊடகங்களுக்குக் கஜேந்திரன் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பொலிஸார் பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்து கைது செய்து வாக்குமூலம் பெற்றதன் பின்னர் விடுதலை செய்துள்ளனர்.

இந்தச் சம்பவமானது தமிழ் மக்களை ஆத்திரமூட்டும் வகையில் அமைந்துள்ளது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு இந்த நாட்டிலே தேனும் பாலும் ஓடச் செய்யும், மனுநீதிச் சோழன் போல் நீதி வழங்குவார்கள் என்று தென்னிலங்கைசிங்களமக்கள்புகழ்ந்துகொண்டிருப்பதை நம்பி தமிழ்ச் சமூகத்தில் ஆழமாகச் சிந்திக்கத் திறனற்றவர்கள் ஜே.வி.பி. இனவாதிகளைக் கொண்டாடுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

வடக்கு – கிழக்கைப் பொறுத்தவரையில் ஜே.வி.பியினுடைய சிந்தனையிலும், பொலிஸ் திணைக்களங்களினுடைய சிந்தனையிலும் எதுவித மாற்றங்களும் ஏற்படவில்லை என்பதை இந்தக் கைது எடுத்துக் காட்டுகின்றது.

கடந்த அரசுகள் மேற்கொண்டதைப் போல் தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையையும், இனவாதத்தையும்தான் ஜே.வி. பியினரும் பின்பற்றப் போகின்றார்கள் என்பதற்கு இந்தக் கைது சாட்சியாக அமைகின்றது.

ஜே.வி.பி. அரசைக் கொண்டாடக்கூடிய மிழர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் உங்களுடைய தலையிலே மண்ணை அள்ளிப் போடுகின்ற செயற்பாட்டை முன்னெடுக்கின்றீர்கள். ஜே.வி.பினுடைய இனவாத சிந்தனையிலே எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை.

புதிய வாக்காளர்கள், இளையோர் தென்னிலங்கையில் இடம்பெறும் போலித்தனமான பிரச்சாரங்களை நம்பி ஏமாந்துவிடக் கூடாது. தமிழர் தாயகத்தில் இனவாத ஜே.வி.பினரை முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டும். அதுபோல் அனைத்து சிங்கள பேரினவாதக் கட்சிகளையும் நிராகரிக்க வேண்டும். அதுவே தமிழ் மக்கள் கொடுக்கின்ற சாட்டை அடியாக இருக்கும்.” – என்றார்.

---

## அநுர - டக்ளஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானிக்கப்பட்டிருந்த திட்டங்களை ஆரம்பிப்பது வேண்டியவற்றுள் முன்னுரிமைப்படுத்தப்பட்ட 38 விடயங்கள் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தாவால் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் உள்ளிட்ட குறித்த விடயங்கள், ஜனாதிபதியால் சாதகமாகப் பரிசீலிக்கப்பட்ட நிலையில், சந்திப்பு சுமுகமாக நிறைவடைந்தது என்று ஈ.பி.டி.பி. கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.பி.டி.பி. கணிசமான ஆசனங்களைப் பெற்று நாடாளுமன்றம் வரவேண்டும் என்ற வாழ்த்துக்களை ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது என்றும் ஈ.பி.டி.பி. கட்சியின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

---

## எல்பிட்டிய பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கீகரிக்கப்பட்ட 8 அரசியல் கட்சிகள், 1 சுயேச்சைக் குழு என்ற அடிப்படையில் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

எல்பிட்டிய தேர்தல் தொகுதியை அண்மித்த பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் பதவிக் காலம் நிறைவடைந்துள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துமாறு உயர்நீதிமன்றம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலை நிறைவு செய்ததன் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தேசித்திருந்த நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதற்கான அதிவிசேட வர்த்தமானியை ஜனாதிபதி கடந்த மாதம் வெளியிட்டிருந்தார்.

பொதுத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடத்தி நிறைவு செய்ததன் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் காலி மாவட்டம், எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்தது.

8 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் உட்பட 2 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியிருந்த நிலையில் 8 அரசியல் கட்சிகளும்,1 சுயேச்சைக் குழுவும் மாத்திரமே குறித்த காலப்பகுதியில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. இதற்கமைய தபால் மூல வாக்களிப்பு இம்மாதம் 14 மற்றும் 18 ஆகிய திகதிகளில் இடம்பெற்றது.

2024.09.21 ஆம் திகதியன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்காளரின் இடது கை சிறு விரலில் தோதான (உரிய) குறியீடு இடப்பட்டுள்ளமையால், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 53 அ(3) ஆம் பிரிவினால் வாக்காளரைத் தோதான குறியீட்டினால் அடையாளமிடுதல் தொடர்பில் தோற்றம் பெறக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இன்று நடைபெறவுள்ள காலி மாவட்டம், எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலின்போது வாக்காளரின் இடது கை பெருவிரலில் தோதான (உரிய) அடையாளமிடப்படும்.

வாக்காளரின் இடதுகையில்பெருவிரல் இல்லாதிருக்கும் பட்சத்தில் உள்ளூர் அதிகார சபைகள் தெர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 53அ (3), அ,ஆ, (1),(2), (3) ஆம் பிரிவுகளுக்கு அமைய அவரது வலது கையில் உள்ள வேறேதேனுமொரு விரல் உரிய குறியீட்டினால் அடையாளமிடப்படும்.



# ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் ஜனாதிபதி அநுரவை சந்தித்தனர்

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ தலைமையிலான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்தனர்.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விளக்கமளித்ததுடன், சுற்றுலாப் பயணிகள் மற்றும் இலங்கை மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு அண்மைக்காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் தெரிவித்தார்.

முக்கிய சுற்றுலாப் பகுதிகளில் பாதுகாப்பு நெறிமுறைகளுடன் கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவசர சேவைகள் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் முக்கியமான பங்காளியாகவுள்ளதோடு, இலங்கையின் இரண்டாவது பாரிய ஏற்றுமதி மற்றும் சுற்றுலா சந்தையாகவும் மூன்றாவது பாரிய இறக்குமதி சந்தையாகவும் செயல்படுகிறது.

இலங்கைக்கான தனது சந்தை பிரவேசத்தை விரிவுபடுத்தல், ஐரோப்பிய ஒன்றியத்தில் தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஆதரவளிப்பதற்கான தமது அரப்பணிப்பை ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இதன்போது ஜனாதிபதியிடம் உறுதிப்படுத்தினர்.

அத்துடன், அறிவுப் பரிமாற்றம், கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊழலுக்கு எதிரான முயற்சிகளில் புதிய பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஆதரவளிக்கும் என அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

தொழிற்கல்வி, கடல்சார் விவகாரங்கள், முதலீடு, அமைதி மற்றும் நல்லிணக்க செயல்முறைகள் உள்ளிட்ட முக்கிய பகுதிகளை வலுப்படுத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் அர்ப்பணிப்பை தூதுக்குழு வலியுறுத்தியதுடன், இந்த பொதுவான முன்னுரிமைகளை முன்னெடுப்பதற்கு நெருக்கமான ஒத்துழைப்புடன் செயற்படுவதாகவும் உறுதி செய்தது.




கடந்த ஜனாதிபதித் தேர்தலை அமைதியான முறையில் நடத்திய இலங்கைக்கு தூதுக்குழுவினர் பாராட்டு தெரிவித்ததுடன், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்து, நெதர்லாந்து, பிரான்ஸ், ருமேனியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் தமது நாடுகளின் ஜனாதிபதிகள் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்திகளை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

ஜெர்மனித் தூதுவர் கலாநிதி பீலிக்ஸ் நியூமன், இத்தாலிய தூதுவர் டெமியானோ பிராங்கோவிக்,, ருமேனியாவின் தூதுவர் ஸ்டெலுடா அர்ஹைர் மற்றும் பிரான்சின் தூதுவர் மாரி–நோயில் டூரிஸ் மற்றும் நெதர்லாந்தின் பிரதித் தூதுவர் இவாம்ஸ் ரட்ஜன்ஸ் ஆகியோர் ஐரோப்பிய ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.



# ஈரான் தூதுவருடன் ஜனாதிபதி சந்திப்பு



ஈரான் தூதுவர் கலாநிதி அலிரேஷா டெல்கோஷ் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றமைக்கு மனப்பூர்வமாக வாழ்த்து கூறிய அவர், ஈரான் ஜனாதிபதி மசூத் பெசஷ்கியானின் விசேட வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் கையளித்தார்.

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஜனாதிபதி விளக்கமளித்தார்.

இலங்கைக்கு வரும் சுற்றுலா பிரயாணிகளினதும் பொது மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், நாட்டுக்குள் பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்த அர்ப்பணிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை மற்றும் ஈரானுக்கு இடையில் காணப்படும் நீண்டகால இருதரப்பு தொடர்புகள் குறித்து இதன்போது நினைவுகூறப்பட்டதுடன், பல துறைகள் ஊடாக ஈரான் – இலங்கை தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வதே தனது நோக்கமாகும் என்பதையும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சுட்டிக்காட்டினார்.

அது குறித்து சாதகமான பதில்களை கூறிய ஈரான் தூதுவர் வர்த்தகம்,தொழில்நுட்பம், கலாசாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் புதிய வேலைத்திட்டங்களுக்கு இலங்கைக்கு உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.



# அரிசி சந்தையை சமநிலைப்படுத்த வர்த்தகர்களின் களஞ்சியக் கொள்ளளவை அதிகரிப்பதற்கு தீர்மானம்

அரிசி சந்தையை சமநிலைப்படுத்துவதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி வியாபாரிகளின் களஞ்சியக் கொள்ளளவை அதிகரிக்க அரசாங்கம் ஆதரவு வழங்கும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர அரிசி வியாபாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத் துறைகளை ஊக்குவிப்பதற்கும் உர மானியம் வழங்குவதற்கும் அரசாங்கம் பெருமளவிலான பணத்தைச் செலவிடுவதால், மக்களுக்கு அரிசி வழங்குவதில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி வியாபாரிகளுக்கு சமூகப் பொறுப்பு இருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

சிறிய மற்றும் நடுத்தர அரிசி வியாபாரிகளின் களஞ்சியக் கொள்ளளவை அதிகரித்து அரிசி சந்தையை சமநிலைப்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அரிசியின் கட்டுப்பாட்டு விலையை அதிகரிப்பதன் மூலம் எந்தவொரு வியாபாரியும் நியாயமற்ற முறையில் இலாபம் ஈட்ட இடமளிக்கப்பட மாட்டாது எனவும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# நீதி முறைமையில் கூட மாற்றங்கள் அவசியம்

மாற்றம் ஒன்றே மாறாதது என்பது பொதுவான பேச்சு வழக்கு.

ஆனால் இலங்கையில் ஆட்சி முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவது மாற்ற முடியாத நெருக்கடியாக இருந்து வருகின்றது.

69 லட்சம் வாக்குகளோடு பெருவெற்றியீட்டி, நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக வந்த கோட்டாபய ராஜபக்ஷவை அறகலய போராட்டம் மூலம் நாட்டு மக்கள் அதிகாரத்தில் இருந்து துரத்தியடித்தமை வெறுமனே கோட்டாபய ராஜபக்ஷவின் இடத்துக்கு புதியவர் ஒருவரைக் கொண்டு வரும் ஒரு மாற்றத்துக்கு அல்ல. அதையும் தாண்டி, இலங்கையின் ஆட்சி முறைபோக்கில் ஒரு முறைமை மாற்றம் - 'சிஸ்டம் சேஞ்ச்' - எதிர்பார்த்துத்தான் அவர்கள் அதனைச் செய்தனர்.

ஆனால், அறகலயப் போராட்டம் கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து இறக்குவதோடு அடக்கப்பட்டு விட்டது. அதற்கு அப்பால் மக்கள் எதிர்பார்த்த ஆட்சி முறை மாற்றத்திற்கான வாய்ப்பு அப்போது மூடப்பட்டு விட்டது.

அது தொடர்பில் தமக்குக் கிடைத்த அடுத்த வாய்ப்பை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை மக்கள் வெளிப்படையாகப் பயன்படுத்தினர் என்பதுதான் நமது அனுபவமாயிற்று.

வழமையான அரசியல் கட்சிகளை அதிகாரத்திலிருந்து புறக்கணித்து, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கவை இலங்கை மக்கள் அதிகாரத்துக்குக் கொண்டு வந்தமை அந்த முறைமை மாற்றத்துக்குத்தான்.

முறைமை மாற்றம் என்பது வெறுமனே ஆட்சி முறைமையிலான அணுகுமுறை மாற்றம் மாத்திரமல்ல, எல்லா துறைகளிலும் நீதி, நியாயமான - பொருத்தப்பட்டான - சரியான முறைமைகளை நடைமுறைப்படுத்தப்படுவதுமாகும்.

குறிப்பாக, நாட்டில் நல்லாட்சிக்கு அடிப்படையான நீதித்துறையிலும் இந்த முறைமை மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதி வழங்குவதில் தாமதம் என்பது பெரும் பாதிப்பாக நாட்டில் உள்ளது. உயர்நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்பட்ட பல வழக்குகள் தீர்ப்பு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படும் நிலைமை, கேட்டுக் கேள்வியின்றித் தொடர்கின்றது. உயர் நீதிமன்றம் விசாரணையை முடித்த வழக்குகளில் தீர்ப்பு எப்போது வழங்கப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எவ்வளவு காலமும் இழுத்தடிக்கப்படலாம் என்ற கீழ்த்தரமான நீதி முறைமைதான் நாட்டில் நடைமுறையில் உள்ளது.

நாட்டில் அரசியலுடன் நேரடியாகத் தொடர்புடைய பல முக்கிய வழக்குகள் இவ்வாறு இழுபடுகின்றன.

நீதித்துறையில் பெரும் அநீதிகள் நீடிப்பதான ஒரு மனக்கிலேசம் - குறைபாடு - ஆதங்கம் - மக்களுக்கு உண்டு.

மக்கள் எதிர்பார்க்கும் அந்த 'சிஸ்டம் சேஞ்சில்' நிச்சயமாக நீதித்துறை மறுசீரமைப்பும் முக்கிய இடம் பெற வேண்டும். நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய விதத்தில் அதன் செயற்பாட்டு முறைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தான் அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும், அதற்கு முன்னரே நீதித்துறை தொடர்பில் - அதன் குறைபாடுகள் தொடர்பில் - மக்களின் அதிருப்தி தொடர்பில் - நீதி முறைமை, அநீதி முறைமையாக்கப்படும் கேவலங்கள் தொடர்பில் - ஆராய்வதற்கும், விசாரிப்பதற்கும், உண்மைகளைக் கண்டறிவதற்கும் உயர்மட்ட ஆய்வுக் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்து, விடயங்களை தன் கவனத்திற்குக் கொண்டுவர முன் முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

நீதித்துறை மீதான மக்களின் அவநம்பிக்கை நாட்டில் நல்லாட்சி மலர்வதற்கான வாய்ப்பை அடியோடு மூடிவிடும் என்பதை புதிய ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் கவனத்தில் கொள்வது முக்கியம்.





# 100 அடி கொடிக் கம்பம் 600 எல்.இ.டி. திரைகள்

## விஜய்யின் த.வெ.க. மாநாடு ஏற்பாடுகள்

விக்கிரவாண்டியை அடுத்த வி.சாலையில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் மாநாடு நாளை நடைபெறுகிறது.


இந்த மாநாட்டில் கட்சியின் தலைவர் விஜய், 100 அடி உயர கம்பத்தில் கட்சிக் கொடியை ரிமோட் மூலம் ஏற்றி வைக்கவுள்ளார். அதற்காக நேற்று பகல் 12:30 மணி அளவில் மாநாட்டு முகப்பில் விழுப்புரத்தைச் சேர்ந்த மணி என்பவருக்கு சொந்தமான இடம் 225 சதுர அடியை ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்து, அதில் 100 அடி உயர கொடிக் கம்பம் நடப்பட்டது.

த.வெ.க. மாநாட்டு மேடையில் இருந்து நடுவே அமைக்கப் பட்டுள்ள ரேம்பில் நடந்து வந்து கட்சிக் கொடியை நடிகர் விஜய் ரிமோட் மூலம் ஏற்றி வைக்கவுள்ளார். மாநாட்டின் மேடை அருகே இணையதள வசதிக்காக தனியார் கம்பெனியின் செல்போன் டவர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாநாடு ஏற்பாட்டின் இறுதிக்கட்ட பணிகளாக மாற்றுத் திறனாளிகள் அமர தனி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த மாநாட்டு நிகழ்வுகளை பார்வையாளர்கள் பார்க்கும் வகையில் 600 பெரிய எல்.இ.டி. திரைகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டு வருகின்றன.

மாநாட்டுக்கு இளைஞர்கள், பெண்கள், கல்லூரி மாணவ, மாணவிகள், கட்சித் தொண்டர்கள் என 2 லட்சம் பேர் வரை வருவார்கள் என எதிர்பார்த்து, அதற்கான பாதுகாப்பு ஏற்பாடு களை பொலிஸார் செய்து வருகின்றனர்.

மாநாட்டில் வரும் தொண்டர்களுக்கு உணவு வழங்க சமை யல் கலைஞர்கள் குழுவினர்கள் வி.சாலையில் உள்ள திருமண மண்டபத்துக்கு வந்துள்ளனர். மாவட்ட நிர்வாகிகள் மாநாட்டு பணிக்காக ஒருநாள் முன்னதாகவே தாங்கள் ஏற்கெனவே "புக்" செய்த ஓட்டல் அறைகளில் வந்து தங்க ஆரம்பித்தனர்.




# வளர்ப்பு நாயிற்கும் தனது சொத்தில் பங்கு

## ரத்தன் டாடாவின் உயில்

பிரபல இந்தியத் தொழில் அதிபரும், டாடா சன்ஸ் குழுமத் தின் முன்னாள் தலைவருமான ரத்தன் டாடா உடல்நலக் குறைவால் மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த 9ஆம் திகதி காலமானார்.

அரச மரியாதையுடன் அவரது உடல் அடக்கம் செய்யப் பட்டது.

இவரது மறைவை அடுத்து டாடா அறக்கட்டளையின் புதிய தலைவராக நோயல் டாடா நியமிக்கப்பட்டு உள்ளார்.

இந்நிலையில், ரத்தன் டாடா தனது சொத்தில் யார் யாருக்கு எவ்வளவு சேர வேண்டும் என்று எழுதிவைத்துள்ள உயில் பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி ரத்தன் டாடாவுக்கு தனிப்பட்ட சொத்து சுமார் 10,000 கோடி ரூபா (இந்திய ரூபாவில்) என மதிப்பிடப் பட்டுள்ளது.

ஜுகுதாரா வீதியில் இரண்டு மாடிகள் கொண்ட வீடு, கடற் கரை நகரமான அலிபாக்கில் 2000 சதுர அடி கொண்ட கடற் கரையோரப் பங்களா, 350 கோடி வங்கி வைப்புகள் மற்றும் டாடா சன்சில் 0.83 சதவீதப் பங்குகள் என ரத்தன் டாடா பெயரில் சொத்துக்களாக உள்ளன.

உயிலில் தனது ஜெர்மன் ஷெப்பர்டு வகை "டிட்டோ" என்ற வளர்ப்பு நாய்க்குத் தனது சொத்தில் ஒரு பங்கை எழுதி வைத்துள்ளார்.

மேலும் டிட்டோவை தனது சமையல்காரர் ராஜன் ஷா கவ னித்துக் கொள்வார் என்றும் உயிலில் குறிப்பிட்டுள்ளார்.

டிட்டோவை பார்த்துக்கொள்ள ஆகும் செலவுகளை ஈடு கட்டும் வகையில் சொத்துக்களை ஒதுக்கியுள்ளார்.

இதைத் தவிர, சமையல்காரர் ராஜன் ஷா, வீட்டுப் பணியா ளர் சுப்பையா ஆகியோருக்கும் சொத்தில் பங்கு என்று உயி லில் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் தன்னுடைய நண்பரான இளைஞர் சாந்தனு நாயுடுவுக்கு சொத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கை ரத்தன் டாடா எழுதி வைத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் சாந்தனு வெளிநாட்டில் சென்று படிக்க டாடா நிறுவனம் கடன் கொடுத்தது.

அக்கடனையும் ரத்தன் டாடா தள்ளுபடி செய்தார்.

மேலும் அவரது அறக்கட்டளை, சகோதரர், சகோதரிகள், வீட்டுப் பணியாளர்கள் மற்றும் பிறருக்கும் தனது சொத்தில் பங்களித்துள்ளார்.

டாடா சன்ஸ் நிறுவனத்தில் 0.83 வீத பங்கையும் ரத்தன் டாடா அறக்கட்டளைக்கு வழங்கியுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.



# காஸா போர் நிறுத்தத்திற்கான பேச்சுக்கு இஸ்ரேல் இணக்கம்

காஸா போர் நிறுத்தத்திற்கான புதிய பேச்சுவார்த்தைக்கு இஸ்ரேல் இணக்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, கட்டார் நாடுகளின் தலைமையில் புதிய பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

அடுத்த வாரம் கட்டாரின் டோஹாவில் இந்த பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த கலந்துரையாடலில் அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான CIA பணிப்பாளர் வில்லியம் பர்ன்ஸ் மற்றும் இஸ்ரேலின் உளவுப்பிரிவு மொசாட்டின் தலைவர் டேவிட் பர்னியா ஆகியோர் கலந்துக்கொள்ளவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தில் 43,500 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் – ஹமாஸ் யுத்தம் தற்போது லெபனான், ஈரான் ஆகிய நாடுகள் வரை வியாபித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஊடகவியலாளர்கள் மூவர் பலி










லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலில் ஊடகவியலாளர்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

லெபனானின் தெற்கு ஹஸ்பையா பகுதியிலுள்ள தங்குமிடத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் குறித்து செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களே இந்த தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இஸ்ரேலிய இராணுவம் காசா முழுவதும் பல தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல்களில் கான் யூனிஸ் பகுதியில் சிறுவர்கள் உட்பட 28 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஜபாலியா முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 150 பேர் உயிரிழந்துள்ளனர் என காஸாவின் சிவில் பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.



இந்த நிலையில், இஸ்ரேலிய போர் விமானங்கள் பெய்ரூட்டில் நேற்று மாத்திரம் 12 வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இந்த தாக்குதல்களில், ஹெஸ்பொல்லாவின் ரத்வான் படையின் தளபதி அப்பாஸ் அட்னான் மஸ்லம் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி அநுரகுமாரவுடன் மியன்மார் தூதுவர் சந்திப்பு



ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கும் மியன்மார் தூதுவர் மலர் தான் டைக் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் தூதுவருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, சுற்றுலாப் பயணிகள் மற்றும் பிரஜைகளின் பாதுகாப்பு ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மியன்மாரில் மனித கடத்தல்காரர்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை விடுவிப்பது தொடர்பில் இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தூதுவருடன் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவுகள் மற்றும் நீண்டகால கலாசார உறவுகளை மேலும் பலப்படுத்த மியன்மார் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக தூதுவர் குறிப்பிட்டார்.

விவசாயம், கல்வி மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தையும் மலர் தான் டைக் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான மியன்மார் தூதரகத்தின் ஆலோசகர்களான லெய் ஈ வின் மற்றும் தெட் சோ டோ ஆகியோரும்கலந்துகொண்டனர்.

## மலசலகூடங்களை சுத்தம் செய்த 22 மாணவர்களுக்கு ஒவ்வாமை

பலாங்கொடை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் மலசலகூடங்களைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த 22 பாடசாலை மாணவர்களுக்குத் திடீர் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

அவர்கள் அனைவரும் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

மலசலகூடத்தைச் சுத்தம் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட திரவத்தினால் அவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

## பொதுத் தேர்தல் தொடர்பில் 662 முறைப்பாடுகள் பதிவு




பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இதுவரையில் 662 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 642 முறைப்பாடுகளும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 5 முறைப்பாடுகளும், ஏனைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 15 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசியத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 215 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 447 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த நிலையில், 522 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன், 140 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



இலங்கையில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

40 வயதைக் கடந்த நான்கு பேரில் ஒருவர் நீரிழிவு நோயினால் பாதிப்புக்குள்ளாவதாக இலங்கை மருத்துவர் சங்கத்தின் உறுப்பினர் பேராசிரியர் வைத்தியர் மந்திக்க விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட புதிய ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டங்களில் சுமார் 40 வயதுக்குட்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளதாகவும் அதில் 33 வீதமானவர்கள் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள் இதயம் தொடர்பான நோய்கள், கை, கால் நரம்புத் தளர்ச்சி, கண்பார்வையில் குறைபாடு போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதனால், பாதிப்புகள் அதிகமாகி சிறுநீரகங்களும் செயலிழக்கும் அபாயம் காணப்படுகின்றது.

நீரிழிவுக்கான அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்தியரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ளும்படியும், உணவுப் பழக்கவழக்கங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை மருத்துவர் சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் மந்திக்க விஜேரட்ன தெரிவித்துள்ளார்.



# இலங்கையின் கடன் திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வை விரைவாக அணுக எதிர்பார்ப்பு

## சர்வதேச நாணய நிதியம் தகவல்

இலங்கையுடனான நீடிக்கப்பட்ட கடன்வசதி திட்டத்தின் கீழான மூன்றாவது மதிப்பாய்வு நடவடிக்கைகளை விரைவாக அணுகுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த வாரம் நடைபெறவுள்ள வருடாந்தக் கூட்டத்தின் போது, இலங்கையுடனான நிதி வசதித்திட்டம் தொடர்பில் தொடர்ந்து கலந்துரையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிரிஷ்ணா ஸ்ரீனிவாசன் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சியமைத்ததன் பின்னர், இந்த மாத முதற் பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டக் குழுவொன்றினால் அதிகாரிகளுடன் பல சுற்றுப் பயனுள்ள கலந்துரையாடல்களை நடத்த முடிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2022ஆம் ஆண்டில் வங்குரோத்து நிலையை அடைந்த இலங்கை, தற்போது சாதகமான பொருளாதார வளர்ச்சியைக் காட்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் மற்றும் தனியார் கடன் வழங்குநர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது இலங்கை சட்ட ரீதியான உடன்பாட்டை எட்டுவது அவசியமாகும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிரிஷ்ணா ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.



# தம்புள்ளை சுற்றுலாத்தளங்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

தம்புள்ளையில் காணப்படும் சுற்றுலாத்தளங்களில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று காலை முதல் இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதன்படி, தம்புள்ளை ரஜமகா விகாரை, தம்புள்ளை உயவத்த ரஜமகா விகாரை மற்றும் சுற்றுலாத்தளங்கள், உணவகங்கள் என்பவற்றில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.




# மின் கட்டண திருத்தம் தொடர்பிலான யோசனை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிப்பு

மின் கட்டண திருத்தம் தொடர்பிலான யோசனை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிப்பு

மின் கட்டண திருத்தம் தொடர்பான யோசனை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள விலை சூத்திரத்துக்கு அமைவாக இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

மேற்படி யோசனையை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆராய்ந்து அனுமதியளிக்கும் பட்சத்தில் மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பான விபரங்கள் வெளியிடப்படுமென இலங்கை மின்சார சபை கூறியுள்ளது.

மின் கட்டணத்தை குறைப்பதற்காக இந்த ஆண்டில் மின்சார சபையினால் யோசனை முன்வைக்கப்படும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதேவேளை, வெற்றிடம் ஏற்பட்டுள்ள பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்காக புதிய நபர்களின் பெயர்கள் ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்படுமென வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.



# நிர்ணய விலையை மீறி அரிசி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

சந்தையில் நிர்ணய விலைக்கு அமைவாக அரிசி விற்பனை செய்யப்படுகின்றதா என்பது தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகள் மாவட்ட ரீதியில் ஆய்வுகளை முன்னெடுத்துள்ளதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் எம். எம். நயிமுதீன் கூறியுள்ளார்.

ஜனாதிபதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அரிசி ஆலை உரிமையாளர்கள் 218 ரூபாவுக்கு நாட்டரிசியை சந்தைக்கு விநியோகிக்க இணக்கம் தெரிவித்திருந்தனர்.

இதன்படி, நாட்டரிசியை 220 ரூபாவுக்கு விற்பனை செய்ய நிர்ணய விலை அறிவிக்கப்பட்டது.

நிர்ணய விலையை மீறி அரிசி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை அடையாளம் கண்டு அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.



# திருமலை உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடன் ஆளுநர் சந்திப்பு

**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவிற்கும், திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளியன்று திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை அதிகரிக்கவும், கழிவுகளைப் பிரித்து சேகரித்து கழிவுகளை முகாமைத்துவம் செய்யவும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வாகனங்கள் குறித்து அறிக்கை அளிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி மன்றங்களின் செயளாலர்களுக்கு ஆளுநர் உத்தரவிட்டார்.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் செயலாளர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன், எடுக்கப்பட வேண்டிய தீர்வுகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் திரு. எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு.எம். மணிவண்ணன், திருகோணமலை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# ரஞ்சனின் வேட்புமனுவை நிராகரிக்கக் கோரி மனு



ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சி சார்பில் கம்பஹா மாவட்டத்தில் பொதுத்தேர்தலில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் வேட்புமனுவை நிராகரிக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்ட சுயேச்சை வேட்பாளர் மஹிந்த சேனாநாயக்க இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்ற ஆசனத்தை பெற்றுக்கொள்ளவும் வாக்களிக்கவும் தகுதியற்றவரென உத்தரவிடுமாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

மனுவின் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் கம்பஹா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி உள்ளிட்டவர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.



# மன்னார் பரப்புக்கடந்தான் கிராமத்தில் 15 வயது ஆண் யானை சடலமாக மீட்பு

## மின் வேலியில் சிக்கி உயிரிழப்பு; ஒருவர் கைது

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரப்புக் கடந்தான் கிராமத்தில் சுமார் 15 வயது மதிக்கத்தக்க ஆண் யானை ஒன்று உயிரிழந்த நிலையில் நேற்று வெள்ளிக் கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த யானை அண்மைக்காலமாக பரப்புக்கடந்தான் பகுதியில் விவசாய நிலங்கள் மற்றும் விவசாய காணிகளில் சுற்றித்திரிந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அந்த யானை நேற்று முன்தினம் இரவு உயிரிழந் துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்த னர்.

யானை இறந்த இடத்திற்கு வருகை தந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் இந்த யானை சட்ட விரோதமான முறையில் அமைக் கப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டு இறந்திருப்பதாகத் தெரிவித்தனர்.

இறப்பு சம்பவம் தொடர்பில் மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

# சேருவில பாடசாலைக்குள் காட்டு யானை அட்டகாசம்!

சேருவில கல்விப் பிரிவுக்குட்பட்ட தெஹிவத்தை மகா வித்தியாலயத் திற்குள் நேற்று காட்டு யானையொன்று புகுந்து அட்டகாசம் செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யானையின் அட்டகாசத்தால் பாட சாலை கட்டடத்தின் கூரை மீது தென்னை மரமொன்று வீழ்ந்ததில் கட்டடத்தின் கூரை சேதமடைந்துள்ளதா பொலி ஸார் தெரிவித்தனர்.

யானை தாக்கிய தென்னை மரம் பாட சாலையின் மேற்கூரையில் வீழ்ந்ததில் மேற்கூரை மற்றும் ஓடுகள் சேதமடைந் துள்ளமையுடன் பாடசாலையின் நீர்க் குழாய்கள் சேதமடைந்துள்ளன எனவும் தலைமையாசிரியர் தெரிவித் துள்ளார்.

சில நாள்களில் காலை ஆறு மணியளவில் பாடசாலையை திறக்க வரும்போது யானை பாடசாலைக்குள் ளேயே இருப்பதாகவும் அவ்வாறான சமயங்களில் பெற்றோர்களை அழைத்து யானையை விரட்டியடிப்பதாகவும் அதி பர் பொலிஸாரிடம் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.






# ஓர் வழி நின்று நேர் வழி சென்றால் நாளை நமதே ...

**பேரன்புமிக்க யாழ். வாக்காளர்களுக்கு,**

வணக்கம்!

உங்கள் நலத்தை உங்களிடமிருந்து பாது காக்கவேண்டுமென, இறைவனைப் பிரார்த் திக்கிறேன். சமூக வாழ்வில் மீண்டும் ஒரு முக்கியமான காலகட்டத்திற்குள் நுழையப் போகிறீர்கள். வரப்போகும் தேர்தலைத்தான் சொல்கிறேன்! வார்த்தையளவில் தம்மைத் தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லிக் கொள் கின்ற பலராலும், தொடர்ந்து நீங்கள் ஏமாற் றப்பட்டு வருகின்றீர்கள். அதற்குக் காரணம் நீங்களேதான்.

♦♦♦♦♦♦

சரி எது? பிழை எது? என்றும், உண்மை எது? பொய் எது ? என்றும் தெரியாமல் இயங்கிவரும் உங்கள் போக்குத்தான் உங்களை மற்றவர்கள் ஏமாற்றுவதற்கு வழி செய்கிறது. மற்றவர்கள் உங்களை ஏமாற்றுவது ஒரு பக்கம் இருக் கட்டும். நீங்களே உங்களை ஏமாற்றிவரும் கொடுமையை என்னென்பது? அதுபற்றிப் பின்னர் விவரமாகச் சொல்கிறேன். அதற்கு முன்பாக உங்களதும், உங்கள் தலைவர்கள தும் இந்த ஏமாற்றுப் போக்கால் விளைந்த நட்டங்களைப் பற்றிச் சில சொல்லவேண்டும்.

♦♦♦♦♦♦

ஒருகாலத்தில் யாழ்ப்பாணத் தமிழர்கள் அறிவாளிகள் என்ற பெயர் நாடுபூராகவும் பதி வாகியிருந்தது. இன்றைய நிலைமை அதற்குத் தலைகீழாய் மாறியிருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழர்கள்தான் இலங்கை வாழ் மக்களுக்குள் அதி உயர் முட்டாள்களோ என்று எண்ணுகிற அளவிற்கு உங்கள் தகுதி இன்று கீழ் இறங்கத் தொடங்கியிருக்கிறது.

♦♦♦♦♦♦

இந்த வார்த்தை உங்களுக்குச் சற்றுக் கோபத் தைத் தரலாம். பொய்மைக்காக உண்மையை விற்றுக் கொண்டிருக்கிறவர்களை, நட்டங்களுக் காக இலாபங்களை விற்றுக் கொண்டி ருப்பவர்களை, தீமைகளுக்காக நன்மைகளை விற்றுக் கொண்டிருப்பவர்களை முட்டாள்கள் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வதாம்?

♦♦♦♦♦♦

ஒருகாலத்தில், இலங்கை பூராகவும் நிர்வா கத்துறையில் புகழ்பெற்றவர்களாகவும், அரசி யல்துறையில் மதிப்புப் பெற்றவர்களாகவும், அறிவுத்துறையில் பெருமை பெற்றவர்களாகவும், வர்த்தகத்துறையில் உயர்வு பெற்றவர்களாகவும், நீதித்துறையில் போற்றப் பெற்றவர்களாகவும் நம் தமிழர்கள்தான் இருந்தார்கள். இன்று அந் தப் பெருமையெல்லாம் உங்களின் கைவிட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. கொண்டிருக்கி றது என்ன கொண்டிருக்கிறது, போயே விட்டது என்பதுதான் உண்மை நிலை. அதற்காம் காரணம் என்ன? நீங்கள் சிந்தித்தாக வேண்டும்.

♦♦♦♦♦♦

எல்லாம் சரியாகத்தான் போய்க் கொண்டி ருந்தது. தமிழர்களை வீழ்த்த நினைத்த, சிங்களப் பேரினவாதிகளின் போக்குத்தான் இந்த நாட்டின் அமைதியை முதலில் கழுவேற்றத் தொடங்கி யது. அந்த அநியாயத்தைத் தொடக்கி வைத்த வர்கள் அவர்கள்தான். அவர்களின் அந்தப் பிழையால் உங்கள் தலைவர்களும் சமநிலை கெடத் தொடங்கியதுதான் கொடுமை.

♦♦♦♦♦♦

தம்மைவிடத் தமிழர்கள் எல்லாத்துறை களிலும் உயர்ந்து வருவதைக் கண்ட சிங்களப் பேரினவாதிகள்தான், “நாம் அனைவரும் இலங்கையர்கள“ என்ற எண்ணத்தை முதலில் சிதைக்கத் தொடங்கினார்கள். தம்மைத்தாம் வளர்த்து, வளர்ந்திருந்த தமிழர்களோடு சமப் பட நினையாமல், தமிழர்களைத் தாழ்த்தி அவர்களோடு தம்மைச் சமப்படுத்த நினைந்த அவர்களது செயல்தான் இந்த நாட்டில் நிகழ்ந்த பிழைகளின் ஆரம்பப்புள்ளி என்று நினைக் கிறேன்.

♦♦♦♦♦♦

இன்று, இழப்புக்களைச் சந்தித்த பிறகுதான், “நாம் அனைவரும் இலங்கை அன்னையரின் புதல்வர்கள்தான“ என்று மீண்டும் எல்லோரும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அன்றே அவ் உண்மையை உணர்ந்து, ஒருவர் கைபிடித்து மற்றவர் வளர்ந்திருந்தால் இந்த நாடு சொர்க்க புரியாய் மாறியிருக்கும்.

♦♦♦♦♦♦

யார் செய்த பாவமோ? கொஞ்சம் கொஞ்ச மாக சிங்களப் பேரினவாதிகள், தாம் தமி ழர்களைத் தாழ்த்துவதாய்ச் சொல்லி இந் நாட்டில் பகை விதையைத் தூவத் தொடங்கினார்கள். அந்தப் பணியில் அவர்களது சமயவாதிகள், அரசியல்வாதிகள், கல்வியாளர்கள் என நடு நிலையாளர்களாய் இருக்க வேண்டிய பலரும் இணைந்து கொண்டதால் மெல்ல மெல்ல இந் நாடு போர்க்களமாக மாறத் தொடங்கியது.

♦♦♦♦♦♦

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

அந்த அறிவீனர்கள், தமிழர்களின் பொருளாதாரத்தை இனக் கலவரங்களாலும் தமிழர்களின் அறிவு நிலையைத் தரப்படுத்தலாலும், தமிழர்களின் நிர்வாக ஆற்றலை நீதி தவறிய தேர்வு முறைகளாலும் தாழ்த்தத் தலைப்பட்டனர்.

♦♦♦♦♦♦

முதலில், இவர்களின் நேர்மையற்ற வன்முறைகளுக்கு அஞ்சித் தமிழர்கள் ஓடத் தொடங்கினார்கள். திரும்பத் திரும்ப அதுவே நிகழ, தமிழர்கள் அப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து நிற்கப் பழகினார்கள். எல்லையின்றி அவர்களின் போக்கு நீண்டதும், தமிழர்கள் துணிந்து அவர்களை எதிர்க்கத் தலைப்படடார்கள். இதுதான் இங்கு நடந்தது.

♦♦♦♦♦♦

இந்த இடத்தில்தான் உங்கள் தலைவர்களும் பிழைசெய்யத் தொடங்கினார்கள். நம்மை அழிக்க நினைப்போரை எதிர்ப்பதென்று முடிவெடுக்கும்வரை அவர்களின் செயல் சரியாகத்தான் போய்க் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் அவ் எதிர்ப்பை அவர்கள் காட்டத் தொடங்கிய முறையும் கூட சரியாகத்தான் இருந்தது. உங்கள் தலைவர்களின் அறிவுப் பிழையோ? அல்லது தமிழினத்தின் தலை விதிப் பிழையோ? பிழையான பாதையில் உங்கள் தலைவர்கள் கால் பதிக்கத் தொடங்கினார்கள்.

♦♦♦♦♦♦

பெரும்பான்மை பலம்பெற்ற ஓரினத்தின் எதிர்ப்பைச் சிறுபான்மையான இனம், எங்ஙனம் எதிர்கொள்வது? இதைப்பற்றித் திட்டமிடுவதில் உங்கள் தலைவர்கள் தவறிழைத்தார்கள். இத்தகைய ஒரு சூழலில் நம் எதிர்ப்பைக்காட்ட அகிம்சை ஒன்றேதான் வழி என்பதை, மகாத்மா காந்தி பாரதத்தில் செயற்படுத்திக் காட்டியிருந்தார். உங்கள் தலைவர்களும் ஆரம்பத்தில் அவ் வழியைத்தான் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள்.

♦♦♦♦♦♦

தமிழர்களின் அகிம்சைப் போராட்டத்தை, சிங்கள இனவாதிகள் வன்முறையால் எதிர் கொண்டபோது உங்கள் தலைவர்களின் போக்கும் தடம்மாறத் தொடங்கியது. "விறகு தலையனுக்கு விறகால் அடிப்பதைத் தவிர" வேறு என்ன வழி? என நீங்களும் ஒருவேளை கேட்கக்கூடும். அடிக்க வாய்ப்பிருந்தால் அடிப் பதில் தவறில்லைதான். வாய்ப்பில்லாதபோது ஆராய்வின்றி, அப் பாதையில் இறங்கிவிட்டு, பின்னர் அடிவாங்கி ஓலமிடுவதில் அர்த்தமில்லை.

♦♦♦♦♦♦

முன்பொருமுறை புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் பாலகுமாரனின் பேட்டியொன்றை "சிரித்திரன்" சஞ்சிகை வெளியிட்டிருந்தது. அப் பேட்டியில் "நீங்கள் வன்முறைப் பாதையை ஆதரிக்கிறீர்களா? அகிம்சைப் பாதையை ஆதரிக்கிறீர்களா?" என்று அவரிடம் கேட்கப் பட்டது.

♦♦♦♦♦♦

அதற்குப் பாலகுமாரன் சொன்ன பதில் இப்போதும் என் ஞாபகத்தில் இருக்கின்றது. "எல்லோருக்கும் பொதுவான பாதையென்று ஒன்றுமில்லை. அவரவருக்குரிய பாதையைத் தத்தமக்குரிய காலம், இடம், வலிமை போன்ற வற்றை வைத்துத்தான், அவரவரே தீர்மானிக்க வேண்டும். அகிம்சையோ, வன்முறையோ தேர்ந்தெடுத்த பாதையில் கடைசிவரை நின்று பிடிக்க வேண்டும். அகிம்சையில் தொடங்கி வன்முறைக்குச் செல்வதோ? வன்முறையில் தொடங்கி அகிம்சைக்குள் புகுவதோ பொருத்தமாயிராது" என்று பதிலுரைத்திருந்தார்.

♦♦♦♦♦♦

உங்கள் தலைவர்கள், அவர் சொன்ன இரண்டாம் நிலைக்குத்தான் ஆளானார்கள். உங்களுடைய ஜனநாயகத் தலைவர்கள் அகிம்சைப் போராட்டம் என்று தொடங்கி பின்னர் மெல்ல மெல்ல ஆயுதப் போராட்டத்தை அங்கீகரிக்கத் தலைப்பட்டார்கள். உங்களது போராளிகளும் ஆயுதப் போராட்டம் என்று தொடங்கி, பின்னர் அகிம்சைப் போராட்டத்தைக் கையில் எடுத்தார்கள். இவ்விருவரதும் உறுதியற்ற தன்மையால் அவர்களது இவ்விருவகைப் போராட்டங்களும் தோற்றுப் போக, நம்மினம் பெருந்துன்பத்திற்காளானது வரலாறு.

♦♦♦♦♦♦

வெள்ளைக்காரர்களும் காந்தியின் அகிம்சைப் போராட்டத்தை ஆரம்பத்தில் அங்கீகரிக்கவில்லைத்தான். பலதரமாய் காந்தியினது அகிம்சைப் போராட்டத்தை அவர்கள் வன்முறையால்தான் சந்தித்தார்கள். "ஜாலியன் வாலா பாக்" சம்பவமே அதற்கான தக்க சான்று.

♦♦♦♦♦♦

காந்தி நினைத்திருந்தால், அவ்விடத்திலேயே அகிம்சையைக் கைவிட்டு வன்முறையைத் தன் பாதையாக்கி இருக்கலாம். ஆனால், அவர் பொறுமை காத்தார். அதற்கு அவருடைய ஆன்ம பலமும், அறிவார்ந்த சிந்தனையும் காரணமாயின. உங்கள் தலைவர்கள் "ஈழத்துக் காந்தி" போன்ற பட்டங்களைப் பொய்மையாய்ச் சுமந்தார்களே அன்றி, காந்தியினது தகுதிகளைத் தமதாக்கிக் கொள்ளவில்லை. அது உங்களது துரதிர்ஷ்டம்.

♦♦♦♦♦♦

எப்போதுமே சண்டைகளைத் தொடக்குவது சுலபம். அதனை முடித்து வைப்பதுதான் கடினம். இது வீட்டுக்கும் பொருந்தும், நாட்டுக்கும் பொருந்தும். பலம் பொருந்தியவர்களை, பலம் குறைந்தவர்கள் எதிர்கொள்ள வேண்டுமாயின், வேற்றிடத்தில் இருந்து ஆதரவு வந்தாக வேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை.

♦♦♦♦♦♦

உலகெங்கும் தம் கரங்களை விரித்து நின்ற ஆங்கிலேயர்களை எதிர்க்க, வெளி இடத்திலிருந்து ஆதரவைப் பெறுவதன் கடினத்தை உணர்ந்ததால்தான், அகிம்சைக்கு எதிரான ஆங்கிலேயர்களின் அத்தனை அட்டூழியங்களையும் காந்தி பொறுத்து நின்றார். அது அவர் எடுத்த அறிவார்ந்த முடிவு. தனி மனிதராக அவர் பெற்றிருந்த ஆன்ம பலத்தால் இந்திய மக்களையும் இடர்தாங்கி, அகிம்சைப்பாதையில் நடத்திச் செல்ல அவரால் முடிந்தது.

♦♦♦♦♦♦

உங்கள் தலைவர்களிடம் அத்தகைய தீர்க்க தரிசனம் இருக்கவில்லை. அதனால் அவர்கள் தாங்களும் தடுமாறித் தமிழினத்தையும் தடுமாற வைத்தார்கள். அகிம்சைப் போராட்டங்களை சிங்களவர்கள் வன்முறையால் எதிர்கொண்ட போது, அடுத்த அடியெடுத்து வைப்பதில், தெளிவில்லாமல் உங்கள் தலைவர்கள் நிலை தளும்பினார்கள்.

♦♦♦♦♦♦

தமிழ்த்தலைமைகளை ஒன்றிணைப்பது என்று எழுபதுகளில் உங்கள் தலைவர்கள்முடிவெடுத்து, "தமிழர் விடுதலைக் கூட்டணியை" உருவாக்கிய போது அச்செயல் பலராலும் பாராட்டப்பட்டது. ஆனால் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில், "தனி ஈழம்" கோருவதென அவர்கள் செய்த முடிவு அறிவுபூர்வமாயும், ஆராய்ந்த செயலாயும் அமையவில்லை. "இதனை இதனால் இவன் முடிக்கும்" என்ற

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

வள்ளுவன் காட்டிய வழியினை அவர்கள் நினைக்க மறந்தது உங்களின் துரதிர்ஷ்டம்.

♦♦♦♦♦♦

தனி ஈழத்தினை அடையும் வழியைத் திட்ட மிடாமலேயே உங்கள் தலைவர்கள் அப்பாதை யில் கால் வைத்தார்கள். யதார்த்தத்திற்குப் பொருந்தாத இலட்சியங்கள் எப்போதும் கவர்ச்சியாகத்தான் இருக்கும். ஆனால், நடை முறைப்படுத்துவதில் அவை சாத்தியமாவ தில்லை. “தனி ஈழ“க் கொள்கையும் அத்தகைய ஒன்றாய்த்தான் அமைந்து போயிற்று.

♦♦♦♦♦♦

சாத்தியமில்லாத அத் தீர்மானம் தந்த கவர்ச்சியால் தமிழ் மக்களும் மதிமயங்கிப் போனது உண்மை. அன்றுதொட்டு இன்றுவரை சாத்தியப்படுத்தமுடியாத அந்த இலட்சிய மயக் கத்திலிருந்து தமிழர்கள் வெளியேறவேயில்லை. மக்களது அந்த மயக்கத்தை முதலீடாக வைத் துத்தான் உங்கள் தலைவர்கள் இன்றுவரை அரசியல் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

♦♦♦♦♦♦

ஜனநாயக நாடுகளில் மக்கள் “மந்தை”களாக வும், தலைவர்கள் “மேய்ப்பன்“களாகவும் தான் பெரும்பாலும் செயற்படுகிறார்கள். அத் தலை வர்கள், அந்த “மேய்க்கும்” வேலையைச் சரியான முறையில் செய்தாற்கூடப் பரவா யில்லை. ஆனால் தாங்களும் பிழைவிட்டு மக்களையும் பிழைவிடச் செய்கின்றபோதுதான் பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன. உங்களது “மேய்ப்பன்“களும், “தேரா மன்னர்களாய்” அப் பிழையைத்தான் செய்தார்கள்.

♦♦♦♦♦♦

தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட வேண்டும் என்ற கோரிக்கைக்கு உடன்பட்டு, வடகிழக் கின் தலைவர்களோடு கைகோர்க்க முன்வந்த, அப்போதைய மலையகத் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள், சாத்தியப்பாடு உணராது உங்களின் தலைவர்கள் எழுப் பிய “தனி ஈழம்“ என்ற குரலைக் கேட்டதும், இவர்களோடு பிணைத்திருந்த தனது கரங்களை உடனடியாக விடுவித்துக் கொண்டார். தீர்க்கதரிசி!

♦♦♦♦♦♦

கைதட்டு வாங்கும் தமது வழமையான மேடைப்பேச்சாக நினைந்தே, உங்கள் தலை வர்கள் “தனி ஈழ”க் கோரிக்கையையும் முன் வைத்து விட்டார்கள். அதனைச் சாத்தியப்படுத்து வதற்கான வழிகள் ஏதும், அப்போது அவர்கள் கையில் இருந்ததாய்த் தெரியவில்லை. அக் கோரிக்கையால் தமிழ் மக்கள் மீதான சிங்கள மக்களின் பகைமை வளர்ந்ததைத் தவிர வேறு பயன் இருக்கவில்லை. அதன் பயனே அடுத் தடுத்துத் தமிழர்களுக்கெதிராக நிகழ்ந்த வன்முறைகள் எனலாம்.

♦♦♦♦♦♦

“பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்த“ கதையாய், அந்தச் சூழ்நிலையில் உலக அரங்கில் நிகழ்ந்த சில மாற்றங்கள். தமிழர்களை ஆபத்தை நோக்கி அடுத்தடுத்து நகர்த்தத் தொடங்கின. வல்லரசுப் போட்டி நடந்து கொண்டிருந்த அக் காலத்தில், அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, அமெரிக்க சார்பு எடுத்ததால், இலங்கையைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரச்செய்ய வேறு வழியில்லாமல், இந்திராகாந்தி அம்மை யார் தமிழர்களின் “தனி ஈழ“க் கோரிக்கைக்கு ஆதரவளிக்கத் தொடங்கினார். அச் செயல் ஈழத் தமிழர்மீது அன்பு வைத்ததால் விளைந்ததன்று. இலங்கையர்க்கு “ஆப்பு“ வைக்க நினைந்ததால் விளைந்தது.

♦♦♦♦♦♦

அதன்பின்பும் ஜே.ஆர். அடங்கியதாய்த் தெரியவில்லை. அவர் மேலும் மேலும் தான் நினைத்த பாதையிலேயே போகத் தொடங்க, அவரை அடக்கித் தம் வழிக்குக் கொண்டுவர நினைந்த இந்திராகாந்தி, ஈழத்தில் சிறியள வில் தோன்றியிருந்த வன்முறையாளர்களின் கரங்களைப் பலப்படுத்தத் தொடங்கினார். இது உங்கள் தலைவர்களின் திட்டமிடலால் நடந்த செயலன்று. “காகம் இருக்கப் பனம் பழம் விழுந் தாற்போல” தற்செயலாய் நடந்த செயலாயிற்று.

♦♦♦♦♦♦

அப்போது அகிம்சை பேசி நின்ற உங்கள் தலைவர்கள், பின் விளைவுகள் பற்றிச் சிந்திக்க–ாமல், ஏற்பட்ட வன்முறை வளர்ச்சியைத் தமக்கு கிடைத்த ஓர் வெற்றியென்றே கருதினார்கள். பிற்காலத்தில் அச்செயலே அவர்களுக்கும் யமனாயிற்று.

♦♦♦♦♦♦

அதன்பிறகு, போராளிகள் பலம் பெற்ற தும், பல குழுக்களாய் இருந்த போராளிகளை விழுங்கி, விடுதலைப் புலிகள் தமிழர்களின் தனித் தலைமையாய் ஆனதும், அவர்களது சாகசச் செயல்களால் இலங்கை ஓரளவு நடுங்கிப் போனதும், உலகத்தின் பார்வை ஈழத்தமிழர் களின் மேல் விழுந்ததுவும், நம் பிரச்சினை யில் உலக நாடுகள் தலையிட முன்வந்ததும், அடுத்தடுத்து வந்த சமாதான வாய்ப்புக்களைத் தம் மீதான மிதமிஞ்சிய நம்பிக்கையால் புலிகள் நிராகரித்ததும், தம் தேவைகள் முடியப் பல நாடுகள் ஒன்று சேர்ந்து புலிகளை அழித்ததும் நடந்து முடிந்த வரலாறுகள்.

♦♦♦♦♦♦

போராட்டக் காலத்திலும் சரி, போராட்டம் முடிந்த பிறகும் சரி உங்களில் பத்து சதவீதம் ஆனவர்களுக்குக்கூட போராட்டத்தில் உண்மை ஈடுபாடு இருந்ததாய்ச் சொல்லமுடியவில்லை. ஆனால், உள்ளூரில் இருப்பவர்களானாலும், வெளிநாடுகளுக்கு ஓடியவர்களானாலும், பொய்ம்மையாய்த் “தனி ஈழம்“தான் தமது உயிர்மூச்சுப் போலக் காட்டி வருகிறார்கள். உண்மையாக அவர்கள் மனதில் அப் போராட்ட உணர்வு ஆழமாய் இருக்கவில்லை.

♦♦♦♦♦♦

கிடைத்த பாதைகளையெல்லாம் பயன் படுத்தி வெளிநாடுகளுக்கு ஓடியவர்களும், போர் முடிந்த கையோடு இன உணர்வை மறந்து தத்தம் வசதிகளுக்காய்ச் செயல்பட்டவர்களும், தனிநாடு பற்றி இன்றும் வாயளவில் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் நகைக்காமல் இருக்க முடியவில்லை.

♦♦♦♦♦♦

நீங்கள் மட்டுமல்ல உங்களின் இன்றைய தலைவர்களும்கூட பொய்யர்களாய்த்தான் இருக்கிறார்கள். மக்களது தேசப்பற்று எனும் நடிப்பை விழுங்கும் அளவிற்கு அவர்களின் நடிப்பு இருக்கிறது. தாம் இயக்கங்களுக்குச் செய்த “ஏவல், கூவல்“ பணிகளை, தாம் செய்த களப்பணிகளாய்க் காட்டி, மிகச் சுலபமாக மக்களை ஏமாற்றிய அவர்கள், நாடாளுமன் றப் பதவிகளைத் தம் நடிப்புக்குப் பரிசாகப் பெற்றுக் கொண்டார்கள்.

♦♦♦♦♦♦

இவர்கள்தான் அண்மைக்காலமாக உங்கள் எதிர்கால அரசியல் வாழ்வைக் குழப்பிக் கொண்டிருக்கும் பெரு மனிதர்கள். “ஈழம்”, “சுயாட்சி”, “போராளிகள்“ போன்ற வார்த்தை

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

களை அவ்வப்போது பயன்படுத்தி, இவர்கள் உங்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி வருகிறார்கள். உங்களின் பொய்யும், இவர்களின் பொய்யும் ஒன்றுசேர தனி ஈழம் கிடைக்காத பட்சத்தில் தமிழர்கள் அனைவரும் கடலில் குதித்து விடுவார்களோ? என நினையும் ஒரு பொய் திறம்பட வடிவமைக்கப்பட்டுவிட்டது.

♦♦♦♦♦♦

முப்பதாண்டுப் போர்ப்பாதிப்புக்குள் இருந்து உங்களை மீட்டெடுக்க ஏதும் செய்யாமல், இப்பொய்யை வைத்து, கா லம் கழித்து வருகிறார்கள் உங்கள் தலைவர்கள். இந்த உண்மை என்று உங்களுக்குப் புரியப்போகிறதோ, அன்றுதான் நீங்கள் உருப்படுவீர்கள்.

♦♦♦♦♦♦

தனி ஈழக் கொள்கையை விட்டு நீங்கள் எல்லோரும் மனதளவில் வெளியே வந்து விட்டீர்கள் என்பதுதான் உண்மை. அந்த உண்மையைத் துணிந்து வெளியிற் சொல்ல உங்களுக்கும் துணிவில்லை. உங்கள் தலைவர்களுக்கும் துணிவில்லை. பதவிப் பயன் நோக்கியே நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள வர்கள் பலரும் இன்று குதித்திருக்கிறார்கள்.

♦♦♦♦♦♦

இவர்கள் அனைவரும் "ஈழம்" என்றும், "சுயநிர்ணய உரிமை" என்றும், "இனமீட்பு" என்றும் பழையபடி பொய்க் குதிரைகளை ஓட்டத் தொடங்கிவிட்டார்கள். நீங்களும் "தேசப்பற்று" என்னும் பொய் நடிப்பைக் காட்டத் தொடங்கி விட்டீர்கள். என்றுதான் உங்களுக்கு விடிவு வருமோ? என நெஞ்சம் ஏங்குகிறது.

♦♦♦♦♦♦

தேர்தலில் நிற்கும் எல்லாப் போலிகளுக்கும் பின்னால் உங்களில் சிலர் குடை பிடித்து நிற்பதைக் காண நெஞ்சம் கொதிக்கின்றது. அண்மையில் ஒரு ஹோட்டலில் தன்னைச் சந்தித்து, தனது தேர்தல் நோக்கப் பிரசுரத்தைத் தந்த ஒரு பெண் வேட்பாளரை, பலர் முன்னால் அவமதித்ததோடு, அவர் தந்த தேர்தல் நோக்கப் பிரசுரத்தைக் கசக்கி அதனால் எச்சில் வாயைத் துடைக்கிறார் ஒரு வேட்பாளர். அவர்தான் உங்களுக்கு விடிவு தரப்போகிறாராம். அத்தகையவரை ஆதரிக்கவும் உங்களில் சில பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். எப்படி உருப்படும் உங்கள் இனம்?

♦♦♦♦♦♦

தமிழரசுக் கட்சியில் சம்பந்தனாரின் திருவருளால் பெற்ற பதவியை வைத்து, கடைசிவரை அங்கு குழப்பம் ஏற்படுத்திக் கொண்டும், "உதயன்" பத்திரிகையை வைத்து, எல்லோரையும் மிரட்டி, சர்வாதிகாரம் செய்து கொண்டும் இருந்த சரவணபவன் அவர்கள் "ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு" க்குள் நுழைந்து "சீற்" பெற்று ஜனநாயகத்தைப் பேணப் போவதாய் மக்கள் மத்தியில் "பச்சைப் பொய்" சொல்லுகிறார். அவரை ஆதரிக்கவும் இன்னும் உங்களில் சிலபேர் இருக்கத்தான் செய்கிறார்கள். எப்படி உருப்படும் உங்கள் இனம்?

♦♦♦♦♦♦

ஏதோ ஓரளவு ஒற்றுமையாய் இருந்த தமிழரசுக் கட்சிக்குள் "ஆமை புகுந்தாற்போல்" புகுந்து உள்ள குழப்பங்கள் எல்லாம் செய்து, பின்னரும் தன்னை நம்பியவர்களையெல்லாம் ஏமாற்றி தான் வளர்ந்து பயன்பெற்ற பின்னர், பெரிய தியாகம் செய்வதுபோல் அரசியலில் இருந்து ஒதுங்குவதாய்ப் பேசி, வித்தை செய்கிறார் முன்னாள் முதலமைச்சர். அவர் ஒருவர் தான் இளைஞர்களுக்கு வழி விடுகிறார் என்று சொல்லி அவரை ஆதரிக்கவும் இன்னும் உங்களில் சில பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். எப்படி உருப்படும் உங்கள் இனம்?

♦♦♦♦♦♦

ஒன்றை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இன, மத, மொழி பேதம் பேசாமல் ஒருவர் ஜனாதிபதியாக வந்திருக்கிறார். அவரது கட்சி அரசமைத்தால் பல மாற்றங்கள் வரும் எனப் பலரும் சொல்லி வருகிறார்கள். அக்கருத்து காலப்போக்கில்தான் உறுதிசெய்யப்படும் என்பது வேறு விடயம்.

♦♦♦♦♦♦

உறுதிசெய்யப்பட்டால், இந்நாட்டில் மற்றவர்களைப் போலவே தமிழர்களும் வாழும் உரிமை பெற வாய்ப்புண்டு. இது பல காலத்திற்குப் பிறகு உங்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம். "தனிநாடு", "ஈழம்" என்ற பொய் முகமூடிகளையெல்லாம் கழற்றி விட்டு, யதார்த்தம் உணர்ந்து, தமிழினம் உயர்வதற்கு, நேர்மையானவர்களோடு கைகோர்த்து, இலங்கை அரச நிர்வாகத்தில் பங்கேற்பதே நீங்கள் உருப்படுவதற்கான ஒரே வழி.

♦♦♦♦♦♦

இதை நான் சொன்னதை வைத்து, புதிய ஜனாதிபதியின் கட்சிக்கே தமிழர்களும் வாக்களிக்க வேண்டும் என நான் சொல்வதாய் தவறாகக் கருதி விடாதீர்கள். அம்முடிவிலும் எனக்கு உடன்பாடில்லை.

♦♦♦♦♦♦

உறுதியாய் முடிவு தெரியாத விடயத்தை நம்பி, தமிழர்கள் தம் தனித்துவத்தை இழந்துவிடக் கூடாது. அப்படியானால் என்ன செய்வது? கேள்வி பிறக்கும். புதிய ஜனாதிபதியின் அணியோடு சமநிலையில் கைகோர்க்கக்கூடிய ஓர் பலமான உங்கள் அணியை, வரும் தேர்தலில் நீங்கள் வெற்றி கொள்ளச் செய்யவேண்டும்.

♦♦♦♦♦♦

அவ் அணி, காலாகாலமாய் நாம் சொல்லி வரும் ஈழத்தமிழர்களின் உரிமை பற்றிய பொய்மையான கருத்துக்களை உதறிவிட்டு, இன, மத, பேதமற்ற யதார்த்தக் கருத்துக்களை ஏற்கும் அரசோடு இணைந்து செயல்பட முன்வர வேண்டும்.

♦♦♦♦♦♦

அங்ஙனம் செயற்பட, அறிவு, அனுபவம், தீர்க்க தரிசனம், உண்மைத்தன்மை, தேச நேசிப்பு, இனஉயர்வு பற்றிய அக்கறை என்பவற்றைக் கொண்டதாய் அவ்அணி இருத்தல் அவசியம். புரட்சிகரக் கருத்தோடு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முன்வந்திருக்கிற புதிய ஜனாதிபதியின் அணியினரோடு உடன்பாடு காண இத்தகுதிகள் அவசியமானவை.

♦♦♦♦♦♦

இம்முறையேனும் உங்கள் வாழ்வு உயர்வதற்கான வழியினை, நீங்கள் சரியான முறையில் கண்டு பிடிப்பீர்களா? இல்லையேல் பொய்மைக்குப் பூச்சூடி மீண்டும் வாழ்விழப்பீர்களா? மேற்சொன்ன தகுதிகளையுடைய அணி எது? நிதானமாய்ச் சிந்தித்து அதனைக் கண்டு பிடிக்கவேண்டிய நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். இம்முறையேனும் உங்களது சிந்தனை சரியான குறி நோக்கி நகருமா? உலகம் பார்த்திருக்கிறது!

# இன்றைய ராசி பலன்கள் - 26.10.2024




இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். நீங்கள் இதில் முழு ஆற்றலையும் செலுத்த வேண்டியிருக்கும். பொழுதுபோக்கிற்கென சிறிது நேரமே ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் இன்று அமைதியாக இருக்கவேண்டும்.

நீங்கள் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். மேலும் நீங்கள் பணிகளை கவனமாக கையாள வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் பேச்சில் கவனம் வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் கவனமற்ற வார்த்தைகளை நீங்கள் பேச வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள். இனிமையான வார்த்தைகள் மூலம் நீங்கள் பலனடைவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க சாத்தியமாகலாம். நீங்கள் உங்கள் மன உறுதியால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையான நம்பிக்கையான உறவு கொண்டிருப்பீர்கள். இன்று மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் சொத்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. முக்கிய முதலீடுகளில் பங்கு கொள்வதன் மூலம் லாபம் பெறலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உங்களின் ஆற்றலை நீங்கள் சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும். இதனால் உங்கள் செயல்களை திறமையாக ஆற்றுவீர்கள். பொருத்தமான செயல்களை செய்து உங்கள் நிலையை மேம்படுத்துவீர்கள். இனிமையான வார்த்தைகள் உங்களுக்கு பல நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி பற்றிய ஆலோசனை நடத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். லாபம் தரும் முதலீட்டிற்கான பயனுள்ள திட்டங்களில் பங்கு கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் அமைதியை உணர்வீர்கள். கூடுதல் பொறுப்புகள் உங்களுக்கு கவலை அளிக்கும். இரவில் தூக்கமின்மை காணப்படும்.

நீங்கள் சிறந்த பலனைக் காண மிகக் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி பெற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த அனுபவம் திருப்தி அளிக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்றைய தேவைகளை பூர்த்தி செய்வது கடினமாக காணப்படும்.




இன்று அதிருப்தியான நிலை காணப்படும். அனுசரணையான போக்கு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். சிறந்த பலன் காண உங்கள் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டமிட வேண்டும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். பணியில் கவனமாக இருப்பதன் மூலம் தவறுகள் நேராமல் தவிர்க்கலாம். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிலவ வேண்டுமெனில் நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாகப் பேச வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். பல வாய்ப்புகள் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்றைய நாளின் பலன்கள் உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

நீங்கள் பொறுப்புடனும் சிரத்தையுடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். கடினமான பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். மொத்தத்தில் உங்கள் செயல்திறனில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாகவும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதுமானதாகவும் இருக்கும். உங்களால் சேமிப்பு நிலையை உயர்த்த இயலும்.




இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது. இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கூடுதல் பணிகள் காரணமாக திட்டமிட்டபடி பணிகளை செய்வது கடினமாக இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். உங்களுக்கு கூடுதல் செலவுகள் ஏற்படும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.10.2024




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழப்பீர்கள். நற்பலன்கள் காண எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று சிறந்த பலன் அளிக்காது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகள் சலிப்பூட்டுவதாக இருக்கும். நீங்கள் சிறந்த பணி மாற்றம் விரும்புவீர்கள். அது இன்று சாத்தியமில்லை.

கடுமையான வார்த்தைகள் மற்றும் செயல்கள் உங்கள் துணையின் மனதில் காயத்தை ஏற்படுத்தும். இதனால் உறவின் ஸ்திரத்தன்மை பாதிக்கும்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கூடுதல் சுமையாக இருக்கும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக உங்களுக்கு வளர்ச்சி அளிக்கும் சில மதிப்பு மிக்க வாய்ப்புகளை இழப்பீர்கள்.

பணியிடத்தில் வெற்றிகள் அதிக அளவில் காணப்படாது. இதனால் பணிகள் தேங்கிக் கிடைக்கும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கலாம்.

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. சிக்கனம் கடைப்பிடிக்க வேண்டும்.




இன்று சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய இலக்குகளை அடைய திட்டமிடலாம். நீங்கள் எதிர்பார்த்ததை விட இன்று அதிகம் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் அதிக வாய்ப்புகள் காணப்படும். நீங்கள் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் அணுகு முறையில் உறுதி காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த அமைதியனா தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இன்றைய நாள் இனிமையாக சிறப்பாக இருக்கும்.

உங்களின் சேமிப்பு ஆற்றல் சிறந்த முறையில் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீடுகளில் நீங்கள் பங்கு பெறலாம்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும். நீங்கள் சில தடைகளை சந்திப்பீர்கள். அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். சிறந்த வளர்ச்சி காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் மேலதிகாரியுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதிகப் பணிகளால் மகிழ்ச்சி குறையும். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப பிரச்சினை சிலவற்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். கருத்துள்ள பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த வேறுபாட்டை சரி செய்யலாம்.

இன்று நிதிக் கட்டுப்பாடு காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.


Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean Group of Companies
KELSEY HOMES
40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park